இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!
களம் -20 வெற்றி -3

# நேர்மை நெறி

மார்ச் 2022

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

(NERMAI NERI)

Rs.10

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ:்தே துணை.

## காவல் துறை அதிகாரிகளில் 90% ஊழல்வாதிகள் சென்னை உயர் நீதி மன்றம் வேதனை



ஊ
ழ
ல்
=
சா
ப
ம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

வணக்கம் !. இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**எச்சரிக்கை**: கொரோனா பெருந்தொற்று பாதுகாப்பு நெறிமுறைகளைத் தவறாமல் கடைபிடித்து பாதுகாப்பாக இருக்குமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**தமிழக நகராட்சி தேர்தல்களும் பல மாநில இடைத்தேர்தல்களும்:-** நடந்து கொண்டிருக்கும் பல மாநில சட்டமன்ற தேர்தல்களும், நடந்து முடிந்து முடிவுகளுக்காக காத்துக் கொண்டிருக்கும் நம் மாநில நகராட்சித் தேர்தல்களும் கோலாகலமாக நடக்கின்றன/நடந்து முடிவுற்றன. ஒரு நகராட்சி வார்டு கவுன்சிலர் தேர்தலில், வெற்றி பெற, கட்சி பாகுபாடின்றி பதவிக்காக ரூ.30.00 லட்சம்/ ரூ.50.00 லட்சம் கூட செலவு செய்துள்ளதாக நம்பத்தகுந்த, ஆதாரத்துடன் நிரூபிக்க இயலாத, செயதிகள் காதில் விழுகின்றன. ஓட்டுக்கு ரூ.100/200 என்ற நிலை மாறி ரூ.2000/- வரை அள்ளி வீசியுள்ளனர். நம் மக்களும் வெட்கமின்றி போட்டிபோட்டுக்கொண்டு இந்த கையூட்டை பெற்றுள்ளனர். வழக்கம் போல், தேர்தல் ஆணையமும், தம் பங்குக்கு கண்காணிப்பாளர்களை நியமித்து விட்டு வாளாயிருந்து விட்டது. ஆட்சியில் இருக்கும் அரசியல் தலைவர்கள், அல்வழியன்றி நல்வழியில் மட்டுமே வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டால் மட்டுமே இந்த அவலநிலை ஒழிவது சாத்தியம். இவ்வாறு அல்வழியில் தேர்வானவர்கள், இந்த செலவை முதலீடாக்கி அதை திரும்ப மக்கள் வரிப்பணத்தில் இருந்து பலமடங்காக எடுப்பதே இவர்களின் முதல் நோக்கமாக இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. திருமங்கலம் ஃபார்முலா இவ்வளவு வேகம் பெற்ற அசுரவளர்ச்சி பெற்றுள்ளது ஆச்சரியம் தான். பெரும் மகான்களின் வழிகாட்டு நன்னெறிகளும்/நெறிமுறைகளும் திரும்ப திரும்ப வலியுறுத்தப்பட்டாலும், பணம் மட்டும் மனித மனத்தை பற்றி எரித்து அதன்பக்கம் இழுத்து விடுகிறது. இந்த வியாதியிலிருந்து இம்மக்களை மீட்டு கொண்டுவருவது கடினமான காரியமாக இருப்பினும் முயன்றால் முடியாதது இல்லை.

**ஏழ்மையும் ஊழலும்:-** தற்பொதுவரும் பத்திரிக்கை செய்திகளை வைத்து பார்க்கின், மெத்த படித்த நல்ல வசதியான வாழ்க்கை வாழும் [மேல்சாதி என்று கூறிக்கொண்டு மற்றவர்களை தகுதியற்றவர்கள் என்று இழித்துக்கூறியவர்கள்] செல்வந்தர்கள் தான் இதுபோன்ற பெரும் ஊழல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. பங்கு வர்த்தகம் ஊழலின்றி செயல்பட அமைக்கப்பட்ட, கண்காணிப்பு அமைப்பான, “SEBI” அமைப்பின் தலைவி, திருமதி. சித்ரா ராமகிருஷ்னாவும், அவருக்கு உறுதுணையாக இருந்த திரு.ஆனந்த் சுப்ரமணியன், [தமிழ்நாட்டவர்] ஆகியோர், பங்கு சந்தை கம்ப்யூட்டர்களில் இருந்த ரகசிய தரவுகளை லஞ்சம் பெற்றுக்கொண்டு தனியார் பங்கு சந்தை புரோக்கர்களுக்கு விற்றுள்ளதற்காக, மத்திய புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். பங்கு சந்தையில் முதலீடு செய்யும் அப்பாவிகள், இதுபோன்ற பங்கு சந்தை தில்லுமுல்லுகளால் தமது சொத்துக்களையெல்லாம் இழந்து, தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கு தள்ளும் கொடூரப்பாவத்தை செய்தவர்கள், இப்பாவிகள். இப்பாவிகளுக்கு நீதிமன்றம் முன் ஜாமின் கொடுக்க மறுத்துள்ளது. ஆனால், இவர்கள், விரைவில், ஜாமின் பெற்றுவிடுவார்கள் என்பது திண்ணம். சட்டத்தினை வளைக்கும் திறமையான வழக்கறிஞர்களும், ஆட்சியாளர்கள் கண்ணசைவால், புலன் விசாரணை காலதாமங்களும், அவர்களுக்கு ஜாமின் கிடைக்க வழிவகை செய்யும். ஜெயலலிதாவுக்கு சாகும் வரை சட்டம் வளைந்து கொடுத்தது உலகறிந்த உண்மை. ஊழல் குற்றசாட்டிலிருந்த செல்வி. ஜெயலலிதா, தமிழகத்தை ஆள்வதையே வேடிக்கை பார்த்த சட்டம் இவர்களை மட்டும் என்ன செய்து விடப்போகிறது. சிறையில் ஆண்டுக் கணக்கில் வாடுபவர்கள் எல்லாம் சிறுங்குற்றம் செய்தவர்களே! ஆள்பலமும், பணபலமும் இருப்போரிடம், சட்டம் பாயவிடாமல் தடுக்கப்பட்டுவிடுகிறது.

இதே நாட்டில்தான், சில காலங்களுக்கு முன், தங்களது சொத்து, சுகம், மற்றும் வாழ்க்கையையே நம் நாட்டுக்காக தியாகம் செய்த **வா.உ.சி; காமராஜர், சுப்ரமனியன் சிவா, கக்கன், காந்தி, நேரு, போன்ற தன்னலமற்ற தலைவர்கள் வாழ்ந்து சென்றுள்ளனர்**. "காதல், மானம், வீரம்"என்பதே எமது பெருமை என்று கூறும் எம் தமிழ் மக்கள், சோற்றின் பின் அலையும் தெருநாய்களை விட மோசமாக, தன்மானத்தை விட்டுவிட்டு காசுக்கு ஓட்டை விற்கும் பணத்தின் பின்னால் அலையும் கூட்டமாக மாறிவிட்டனர். இந்த அவல நிலைமையில் எம் மக்களை வைத்துள்ள இன்றைய அரசியல் வாதிகள் குறித்து என்ன சொல்வது?. இதனால் தான், "எம் மக்கள், சுதந்திரம் பெறத்தகுதியற்றவர்கள். இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டாம்" என்று தந்தை பெரியார் முழங்கியுள்ளார். என்னே தீர்க்கதரிசி!. இத்தகு தியாகிகளை ஈன்ற பாரதமாத இன்றைய, இதுபோன்ற கொடுமையான அரசியல்வாதிகளையும் ஈன்றுள்ளதன் நோக்கம் என்னவாக இருக்கும்? என்ற கேள்விக்கு பதிலே கிடைக்க மறுக்கிறது.

**நமது லட்சியம்**:- ஒவ்வொரு குடிமகனும், தனக்கும் தன் குடும்பத்திற்கும்ம் தேவையானவற்றை தம் உழைப்பாலன்றி அல்வழியில் பெறாமல் சுய கவுரவத்துடன் வாழும் வகையில் அரசின் கல்வியும் திட்டங்களும் அமைய வேண்டும். அதற்கான நமது, முயற்சியில், நாம், அல்வழி தீமைகளையும், நல்வழி கவுரவத்தையும் மக்களிடம் விதைக்க தொடர்ந்து உழைப்போமாக !!.

**ஒன்றுபடுவோம்! சட்டப்படி போராடுவோம்!! வெற்றிபெறுவோம்!!!.**

நன்றி! வணக்கம்!!.

அன்புடன்,
(ந.சுப்ரமனியன்)



## சுதந்திரம்

**வே. கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

ஓட்டுப் போட்டதில் எந்த கட்சிக்காரர்கள் ஜெயிக்கிறார்களோ அந்தக் கட்சிக்காரர்கள் ஐந்தாண்டுகள் ஆட்சியில் மந்திரிகளாக ஆளுவார்கள். பல கோடி ரூபாய் வரிப்பணத்தை திருடித்திருடி சேர்க்க மந்திரிகளுக்கு சுதந்திரம் உண்டு. பல பெண்களை அணைக்க பணத்தை அள்ளி அள்ளி கொடுக்க மந்திரிகளுக்கு நாட்டில் சுதந்திரம் உண்டு. வெளி நாட்டிலும் சொத்துகள் வாங்க சுதந்திரம் உண்டு. காவல் உயர் அதிகாரிகளும் லஞ்சம் வாங்க சுதந்திரம் உண்டு. வருமான வரி உயர் அதிகாரிகளுக்கும் வரி ஏய்ப்பவர்களைக் கண்டு கொள்ளாமல் பதவியில் சும்மா உட்கார்ந்து சம்பளமும் கிம்பளமும் வாங்க இந்நாட்டில் சுதந்திரம் உண்டு.

மக்களுடைய வரிப்பணத்தில் மந்திரிகள் திருடியதாக வழக்குகள் வந்தால் வக்கீல்களுக்கும், நீதிபதிகளுக்கும் பணத்தை பங்கு போட்டு வாழ சுதந்திரம் உண்டு.

அடுத்த கட்சிக்காரர்களும் ஓட்டு போட்டதில் ஜெயிக்க அவர்களும் ஐந்தாண்டுகள் மந்திரிகளாக ஆட்சி செய்வார்கள். ஐந்தண்டு காலத்தில் இவர்களும் மக்கள் வரிப்பணத்தை பல கோடி திருட சுதந்திரம் உண்டு. ஊழல் செய்ய, லஞ்சம் வாங்க இவர்களுக்கும் சுதந்திரம் உண்டு. மேடையில் பொய் பேச முழு சுதந்திரம் உண்டு. பல பெண்களையும் சேர்த்துக்கொண்டு உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் சொத்து சேர்க்க சுதந்திரம் உண்டு.

யார் எல்லாம் கோடி கோடியாய் பணத்தில் தொழில் செய்கிறார்களோ அவர்களுக்கும் சுதந்திரம் உண்டு. யார் எல்லாம் சினிமாவில் நடித்தும், (வெறும் காதல், சண்டை படங்கள்) தயாரித்தும் கோடி கோடியாய் பணம் புரண்டால் அவர்களுக்கும் சுதந்திரம் உண்டு. யாரெல்லாம் மீடியா நடத்துகிறார்களோ அவர்களுக்கும் சுதந்திரம் உண்டு. நல்ல சமுதாய அமைப்புக்கு வழிசெய்யாதவர்களுக்கு நம் நாட்டில் சுதந்திரம் உண்டு.

ஆனால், இந்த நாட்டில், ஏழைகளுக்கு மட்டும் ஏன் சுதந்திரம் இல்லை? இந்த சுதந்திர நாட்டில் ஏழைகள் எதைக்கண்டார்கள்? அதிகாரியிடம் எதை சொன்னாலும் ஏழைகளுக்கு எந்த நீதியும் கிடைக்காது. காவல் நிலையம் சென்றாலும் ஒரு நியாயமும் கிடைக்காது. நீதிமன்றம் செல்ல பணமும் கிடையாது; வழியும் தெரியாது.

ஓட்டுப்போடுவதற்கு மட்டும் ஏழைகளுக்கு சுதந்திரம் இருக்கிறது.. அதையும் சரியான வழியில் பயன் படுத்த முடிவதில்லை. ஏனென்றால் நல்லவர்கள் அரசியலுக்கு வர முடிவதில்லை.

**அரசியல்வாதிகள், அதிகாரிகள், காவலர்கள் எல்லாம் குற்றவாளிகள். சுதந்திரம் பித்தலாட்டக்காரர்களுக்கு :**
**கொடுமைகள் ஏழைகளுக்கு.**

**நீதிபதிகளில் கூட சிலர் மட்டுமே நியாயமாக நடந்து கொள்கிறார்கள்.**
**இந்த சுதந்திரம் யாருக்கு ? ஏழைகளுக்கு 1947க்கு முன்பு சுதந்திரம் கிடையாது.**

**சுதந்திரம் வாங்கி இருபது ஆண்டுகள் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருந்த நம் நாடு, ஊழலால் ஏழை மக்களுக்குக் கிடைத்த சுதந்திரம் பறி போய்விட்டது.**

## 28 வங்கிகளில் ரூ.22,842 கோடி மோசடி: ஏபிஜி ஷிப்யார்டு நிறுவனம் மீது சிபிஐ வழக்கு

நீரவ் மோடி, விஜய் மல்லையா ஆகியோரை மிஞ்சும் வகையில் குஜராத்தைச் சேர்ந்த கப்பல் கட்டும் நிறுவனம் ஒன்று ஏறக்குறைய 23,000 கோடி ரூபாய் வங்கிகளிடம் இருந்து கடன்பெற்று மோசடி செய்துள்ளதை சிபிஐ அம்பலமாக்கியுள்ளது.

28 வங்கிகளில் ரூ.22,842 கோடி கடன் வாங்கி மோசடி செய்ததாக ஏபிஜி ஷிப்யார்டு மற்றும் அதன் இயக்குநர்கள் ரிஷி அகர்வால் மற்றும் சந்தானம் முத்துசாமி மீது சி.பி.ஐ., அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்துள்ளனர். ஏபிஜி நிறுவனத்தின் கீழ் செயல்படும் ஏபிஜி ஷிப்யார்டு லிமிடெட் நிறுவனம் கப்பல் கட்டுதல் மற்றும் சரி செய்யும் பணிகளில் செயல்பட்டு வந்தது. இந்த நிறுவனம், குஜராத்தின் தாகேஜ் மற்றும் சூரத் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்தது.

ஸ்டேட் வங்கியில் ரூ.2,925 கோடி, ஐசிஐசிஐ வங்கியில் ரூ.7,089 கோடி, ஐடிபிஐ வங்கி ரூ.3,634 கோடி, பாங்க் ஆப் பரோடாவில் ரூ.1,614 கோடி, பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.1,244 கோடி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரூ.1,228 கோடி கடன் வாங்கி உள்ளது. வங்கியில் எந்த காரணத்தை கூறி கடன் வாங்கியிருந்தார்களோ அதற்கு பயன்படுத்தாமல், வேறு காரணங்களுக்காக கடனை பயன்படுத்தியுள்ளதாக சி.பி.ஐ., தெரிவித்துள்ளது.

முதலில், இந்த நிறுவனம் மீது கடந்த 2019 நவம்பர் 8ம் தேதியில் ஸ்டேட் வங்கி புகார் அளித்திருந்தது. இதன் பின்னர் 2020 மார்ச் 12ல் சி.பி.ஐ., சில விளக்கங்களைக் கேட்டுள்ளது. அதன் பிறகு அதே ஆண்டு ஆகஸ்ட்., மாதம் ஸ்டேட் வங்கி புதிதாக புகார் அளித்தது. இதன் பின்னர், அதனை நன்கு ஆராய்ந்த பிறகு கடந்த பிப்ரவரி 7ம் தேதி சி.பி.ஐ., வழக்குப்பதிவு செய்துள்ளது.

அந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் ரிஷி அகர்வால், சந்தானம் முத்துசாமி, அஷ்வினி குமார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 'ஏபிஜி ஷிப்யார்டு' என்னும் கப்பல் கட்டுமான நிறுவனம் குஜராத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. தஜெஹ் மற்றும், சூரத்தில் கட்டுமானத் தளங்களைக் கொண்டுள்ள இந்த நிறுவனம் கடந்த 16 ஆண்டுகளில் 165 கப்பல்களைக் கட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிறுவனத்தின் மீது ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா 2019ஆம் ஆண்டு வங்கிக் கடன் தொடர்பாக புகார் ஒன்றை அளித்தது.

இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வரும் நிலையில் வங்கிகளில் இருந்து பெறப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய் கடன்களை வெளிநாடுகளில் உள்ள இதன் துணை நிறுவனங்களுக்கு முறைகேடாக மாற்றியது விசாரணையில் தெரியவந்துள்ளது.

**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## <u>தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் 2007</u>

**TN GOVT PROTECTION OF TANKS AND EVICTION OF ENCROACHMENT ACT 2007....**

பராந்தகச் சோழன் (கி.பி 907-953) ஆட்சிக்காலத்தில், தனது எதிரிகளை எதிர்நோக்குவதற்காக, தனது புதல்வன் இராஜாதித்தனை, படை வீரர்களுடன் திருமுனைப்பாடி என்ற இடத்தில் ஆண்டுகள் பல தங்கியிருந்து முகாமிடச் செய்தான்.

ஆயிரக்கணக்கான வீரர்கள் எந்த வேலையும் செய்யாமல் இருப்பதை கண்ட இராஜாதித்தன் தன் படைவீரர்களைக் கொண்டு காவிரி நீரைச் சேமிக்க அமைத்தது தான் வீராணம் ஏரி. இந்த ஏரியின் நீளம் 18 கிலோ மீட்டர், அகலம் 4 கிலோ மீட்டர். 1011 ஆம் ஆண்டு கட்டத் துவங்கி 1037-ல் கட்டி முடிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அரசர்கள் காலத்தில் கூட நீர்நிலைகளை மேம்படுத்தும் எண்ணம் அவர்களுக்குள் தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருந்திருக்கிறது. ஆனால் இன்று நீர்நிலைகளை மேம்படுத்தா விட்டாலும் அழிக்காமல் இருந்தால் போதும் என்ற நிலை உருவாகி விட்டது. இவ்வாறு, நாட்டின் விடுதலைக்கு முன் அதாவது 1947-ல் சென்னை மாகாணத்துக்குள் இருந்த இன்றைய தமிழக நிலப்பரப்பில் மட்டும் 50,000 நீர்நிலைகள் இருந்தன. இன்றைக்கு அது பாதிக்கும் குறைவாகிவிட்டது. வெறும் 20,000 நீர்நிலைகள் மட்டுமே எஞ்சியிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

தற்போது, தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 ஏரிகள் உள்ளன. இவற்றுள் 13,710 ஏரிகள் நீர்வள ஆதாரத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாநிலத்தில் 5.40 இலட்சம் ஹெக்டேர் ஏரிகள் மூலம் நீர்ப்பாசன வசதி பெறுகிறது. அரசின் புள்ளிவிவரப்படி, தமிழகத்தில் இன்றைக்கு 18,789 பொதுப்பணித் துறை ஏரிகள், 29,484 கிளை வாய்க்கால்கள், 86 ஆறுகள், 200 அணைகள் இருக்கின்றன. தமிழகத்தில் கடந்த 50 ஆண்டுகாலமாக பல்லாயிரக்கணக்கான ஏரிகள், குளங்கள், குட்டைகள் காணாமல் போய்விட்டன. அதன் விளைவே இன்று தமிழகம் மழை வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. சொல்லப்போனால், மழையின் தீவிரத்தை அவர்கள் நன்கு உணர்ந்திருந்த காரணத்தினாலேயே, சென்னையைச் சுற்றி, நூற்றுக்கணக்கான ஏரிகளை அமைத்திருந்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டமாக கருதப்பட்டது. தமிழகத்தில் இயற்கையின் அருட்கொடையான நதிகளையும், நீராதாரங்களையும் நாம் சரியாகப் பராமரிக்கவில்லை என்பதைத் தாமதமாக உணர்ந்திருக்கிறோம். மேலே சொன்ன பட்டியலில், பல நதிகள் தற்போது வரைபடங்களில் மட்டுமே இருக்கின்றன. நீர்நிலைகளின் நிலை அதைக் காட்டிலும் மோசம். நிலத்தடி நீரும் மிகவும் குறைந்துவிட்டது. இதனால் 1.10 கோடி ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாய நிலத்தின் பரப்பும் சுருங்கிக்கொண்டே வருகிறது. இவை அனைத்திலும் அரசுக்கும், மக்களுக்கும், ரியல் எஸ்டேட்காரர்களுக்கும் பங்கு உண்டு. தமிழகத்தில் பரவலாக இளைஞர்கள் குழுக்கள் நீர்நிலைகளையும், மறைந்துவிட்ட ஆறுகளையும் தேடத் தொடங்கியிருப்பது நம்பிக்கை தருகிறது.

இதில் இன்னொரு நிர்வாகச் சிக்கல் என்னவென்றால், ஏரிகளைப் பொறுத்த வரை ஏரி நிர்வாகம் பொதுப்பணித்துறை அல்லது ஊரக வளர்ச்சித்துறையிடம் இருக்கும், அதன் வரைபட விவரம் நில அளவையிடமும், நிர்வாகம் வருவாய்த்துறையிடமும், அதிலுள்ள வண்டல் மண் கனிம வளத்துறையிடமும், பாதுகாப்பு காவல்துறையிடமும் அதிகாரப்பகிர்வு உள்ளது.

அதிக வறட்சி, வெள்ளம் இரண்டிலிருந்தும் நம்மை நாம் காத்துக்கொள்ள ஏரிகளின் பாதுகாப்பு மிகமிக அவசியம்... அதன் படி, தமிழ்நாடு சட்டப்பேரவையின் பின்வரும் சட்டமானது, 2007 ஆம் ஆண்டு மே திங்கள் 22ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது. பொதுப்பணித் துறையின் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மையின் கீழ் உள்ள ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், ஆக்கிரமிப்பை

அகற்றுவதற்காகவும், இத்தகைய ஏரிகளைப் பாதுகாப்பதற்கும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்குமான நடவடிக்கைகளுக்கு வகை செய்வதற்கானதொரு சட்டம். இந்தியக் குடியரசின் ஐம்பத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் சட்டம் **“தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் 2007 (Tamilnadu protection of Tanks and Eviction of Encroachment Act, 2007) (சட்ட எண் - 8/2007)”** இயற்றப்பட்டது

**<u>பிரிவு 1. குறுந்தலைப்பு, பரவெல்லை மற்றும் தொடக்கம்:-</u>**

i. இந்தச் சட்டம் 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம் என வழங்கப்பெறும்.
ii. இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.
iii. இது, அரசானது, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**<u>பிரிவு 2. பொருள் வரையறைகள்.-</u>**

இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி

a) ‘ஆயக்கட்டுப் பரப்பு’ என்றால், எந்த ஒரு பாசன அமைப்பின் மூலமும் அதன் ஆளுகையின்கீழ் பாசனம் பொருள்படும்.
b) ‘வயல் வாய்க்கால்’ என்றால், பாசனத்திற்காக நீரைப் பெறவும், அதை பகிர்ந்தளிப்பதற்காகவும், தற்போது இருக்கின்ற வாய்க்கால் அல்லது இனி கட்டப்பட இருக்கின்றதுமான ஒரு வாய்க்கால் என்று பொருள்படும்.
c) வயல் வடிகால் என்றால், நிலத்திலிருந்து உதவாத கழிவு நீர் அல்லது உபரி நீரை வெளியேற்றும் நீர் செல்வழி என்று பொருள்படும்.
d) ‘முன்கரைப் பரப்பு’ என்றால் ஏரிக்கரையின் நீர்வரத்துப் புக்கப் பகுதியில் (Tank bund) உள்ள முழுநீர்மட்ட அளவிற்கு மேலுள்ள நீர் பிடிப்புப் பகுதியை ஒட்டிய நிலப்பகுதி என்று பொருள்படும்.
e) ‘ஏரியின் முழு நீர்மட்டம்’ என்றால், உபரிநீரை, வெளியேற்றும் கட்டமைப்பின் நீர் வழிந்தோடும் மட்டத்தின்வரை தேக்கி வைக்கப்படும் நீரின் மட்டம் என்று பொருள்படும்.
f) ‘அரசு’ என்றால் மாநில அரசு என்று பொருள்படும்.
g) ‘நிலம் ‘என்றால், நிலத்திலிருந்து கிடைக்கப்பெறும் நலப் பயன்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பொருள்களையோ அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட எவற்றுடனும் நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட எதுவும் என்று பொருள்படும்.
h) “வகுத்துரைக்கப்பட்ட” என்றால், விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.
i) “வழக்கு வாய்க்கால்” ‘என்றால், நீர் ஆதாரமொன்றிலிருந்து நீரினைப் பெற்று, கீழ்மட்டத்தில் உள்ள ஏரிக்கு வழங்கும் ஒரு வாய்க்கால் என்ற பொருள்படும்.
j) ‘உபரி நீர் செல்வழி‘ என்றால், நீர் ஆதாரமொன்றிலிருந்து நீரினைப் பெற்று, கீழ்மட்டத்தில் உள்ள அடுத்த ஏரிக்கோ அல்லது ஆற்றுக்கோ எடுத்துச்; செல்லும் வாய்க்கால் என்ற பொருள்படும்.
k) ‘உபரிநீர் கட்டமைப்பு‘ என்றால், ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரை, ஏரியின் பாதுகாப்பின் பொருட்டு, கீழ்மட்டத்தில் உள்ள ஆறு அல்லது ஏரிக்கு வெளியேற்றும் ஒரு ஏற்பாடு என்று பொருள்படும்.
l) ‘ஏரி‘ என்றால், நீரினைப ;பயன்படுத்துவதற்குத் தேக்கி வைப்பதற்காக ஏற்படுத்துப்பட்ட ஒரு கட்டமைப்பு மற்றும் வழங்கு வாய்க்கால் மற்றும் அதனைச் சார்ந்த கட்டுமானங்கள், ஏரி மதகு, உபரிநீர் செல்வழி மற்றும் அதனைச் சார்ந்த கட்டமைப்புகளை உள்ளடக்கியதாகும். இது தவிர பொதுப்பணித்துறையின்

கட்டுப்பாடு மற்றம் மேலாண்மையில் உள்ள வடிகால்கள மற்றும் ஏரியின் புறம்போக்கு நிலங்கள் என்று பொருள்படும்.

m) ‘ஏரிக்கரை‘ என்றால் ஒரு சிறிய நிலையான மண்ற அணை பொருள்படும்.

n) ‘ஏரி மதகு‘ என்றால், ஏரியிலிருந்து பாசனத்திற்காக நீரினை வழங்குவதற்கான போக்கு வழி என்ற பொருள்படும்.

o) ‘நீர்பிடிப்பு பரப்பு‘ என்றால், ஏரியின் முழு நீர்மட்ட அளவில், பரவியுள்ள நீரின் பரப்பு என்ற பொருள்படும்.

**<u>பிரிவு 3. ஏரிகளை அளப்பதற்கு பணிப்பாணையிடுவதற்கான அதிகாரம்</u>.-**

**(Power to direct survey of tanks)**

அரசானது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஏரிகள் தொடர்பான பரப்பிடங்களைப் பொறுத்த வரையிலான எல்லைகளைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக வருவாய் துறையில் கிடைக்கக்கூடிய பதிவுருக்களின்படி நில அளவை செய்வதற்குப் பணிப்பாணை பிறப்பிக்கலாம் மற்றும் எல்லைகளை அடையாளம் காணும் நோக்கத்திற்காக வாய்க்கால், அனைத்து நாற்புற எல்லைகள், அடையாளங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ற விளக்கப்படங்களும் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

**<u>பிரிவு 4. நில அளவை அலுவலர்களை நியமித்தல்.-</u>**

(1) அரசோ அல்லது அரசால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர்கள் எவருமோ ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வட்டார எல்லைகளுக்குள்ளாக இருக்கும் ஏரிகளை நில அளவை செய்வதற்காக வட்டாட்சி நில அளவையர் நிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் நில அளவை அலுவலராக ஆணை வாயிலாக நியமிக்கலாம்.

(2) நில அளவையர் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய முறையில் ஏரிகளை நில அளவை செய்வதை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) ஏரிகளைக் கட்டுப்பாடு செய்யும் பொதுப்பணித் துறையின் அத்தகைய அலுவலர்கள் நில அளவை அலுவலருக்கு உதவி புரிதல் வேண்டும்.

**<u>பிரிவு 5. நுழைவதற்கான அதிகாரம்.-</u>**

நில அளவை அலுவலர் மற்றும் நில அளவை அலுவலருக்கு உதவி செய்யும் அலுவலர்கள் ஏரிகளை நில அளவை செய்வதற்காக நிலம் எதிலும் நுழைவதற்கும் மற்றும் தேவைப்படக்கூடிய அனைத்துச் செயல்களையும் செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

**<u>பிரிவு 6. நில அளவை அலுவலரின் அறிக்கை.-</u>**

(1) நில அளவை அலுவலர், ஏரிகளை அளக்கும் பணி முடிந்தபின்பு அவைகளின் எல்லைகளை அடையாளம் காணும் நோக்கத்திற்காக ஏரிகளின் எல்லைகளையும் தேவைப்படும் பிற தகவல்களையும் குறிக்கிற விளக்கப்படம் ஒன்றையும், பதிவுறு ஒன்றையும் தயார் செய்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி தயாரிக்கப்பட்ட விளக்கப்படம் மற்றும் பதிவுருவானது அரசால்

குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஏரிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிற பொதுப்பணித்துறை அலுவலரொருவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவில் கட்டப்பட்ட அலுவலரானவர், விளக்கப்படும் மற்றும் பதிவுருவானது ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஏரியின் எல்லைகளைக் குறிப்பிட்டு வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் அறிவிப்பு ஒன்றினை வெளியிடுதல் வேண்டும்.

<u>பிரிவு 7. ஆக்கிரமிப்பை அகற்றுதல்.-</u>

(1) 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர், நபர் எவரும் ஏரியின் எல்லைகளுக்குள்ளாக நிலம் எதையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும் மற்றும் ஆக்கிரமிப்பாளர் அகற்றப்பட வேண்டும் எனவும் கருதுவாரானால், அந்த அலுவலரானவர் வகுத்துரைக்கப்பட்ட முறையில் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு தொடர்புடைய நபரை கோரி அறிவிப்பு ஒன்றினை பிறப்பித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால அளவிற்குள்ளாக ஆக்கிரமிப்பாளர் ஆக்கிரமிப்பை அகற்றாதவிடத்தும் மற்றும் ஏரியின் எல்லைகளுக்குள்ளாக அமைந்த நிலத்தை விட்டுச் செல்லாமலும் இருக்கிறவிடத்தும், 6 ஆம் பிரிவின் (2) அம் உட்பிரிவில் கட்டப்பட்ட அலுவலர், தேவைப்படக்கூடிய அத்தகைய காவலரின் உதவியைப்பெற்ற ஆக்கிரமிப்பை அகற்றி ஏரியில் எல்லைகளுக்குள்ளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின் உடைமையை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக எந்த காவல் அலுவலரின் உதவியானது தேவைப்படுகிறதோ அவர் அந்த அலுவலருக்குத் தேவையான உதவியைச் செய்தல் வேண்டும்.

(3) ஏரியின் எல்லைகளுக்குள்ளாக நிலத்தின் மீது விளைந்த பயிர் அல்லது எழுப்பப்பட்ட பிற கட்டமைப்பு எதுவும் தண்ட இழப்புக்கு உள்ளாதல் வேண்டும் மற்றும் (1)ஆம் உட்பிரிவின்படியாக அறிவிப்புக்குப் பின்பு ஆக்கிரமிப்பாளரால் கட்டப்பட்ட கட்டடம் அல்லது எழுப்பப்பட்ட பிற கட்டுமானம் எதுவும் அல்லது அதில் சேகரித்து வைக்கப்பட்ட எதையும் ஆக்ரமிப்பாளர் அகற்றாது இருப்பின் அவையும் தண்ட இழப்பிற்கு உள்ளாக வேண்டும்

<u>பிரிவு 8: குற்றங்களும் தண்டணைகளும்</u>

a) சட்டப்படியான அதிகாரமின்றி தண்ணீர் சூழப்பட்ட நிலத்திலும் ஏரியின் நீர்க்கரை பரப்பிடங்கள் நுழைகிற
b) சட்டப்படியான அதிகாரமின்றி பயிர் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிற
c) சட்டப்படியான அதிகாரமின்றி மரங்களையும் வளைவித்திருக்கிற கட்டப்பட்ட கட்டமைப்புகளை சேதப்படுதுகிற
d) ஏரிக்கரையை, ஏரி மதகுகளை, உபரி நீர் கட்டமைப்புகளை பிறவாறு கட்டப்பட்ட கட்டமைப்புகளை சேதப்படுதுகிற
e) இந்தச் சட்டத்தின்படி அலுவலர்கள் தங்களுடைய பணியினைச் செய்வதைத் தடுக்கிற
f) ஏரிகளை நிரப்புவதற்கு நீர் வழங்கும் வாய்க்காலின் நீரோட்டத்தை தடுக்கிற வகையில் இடையூறு செய்து அருகிலுள்ள வாய்க்கால் புறம்போக்கு நிலங்களை ஆக்ரமிக்கிற

g) ஆயக்கட்டு பரப்பிடத்தை நிரப்புவதற்கு ஏரி மதகிலிருந்து மாற்றி வாய்க்கால்களுக்கான நீரோட்டத்தை தடுக்கிற
h) வயல் வாய்க்கால் அமைப்புகளில் உள்ள நீரோட்டத்தை சேதப்படுத்தி தடுக்கிற
i) எவரொருவரும் மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவிற்க்கான சிறைத் தண்டணையுடனோ அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டத்துடனோ அல்லது இரண்டும் விதித்தோ தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**<u>பிரிவு 10. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்</u>**

இந்தச் சட்டதின் வகைமுறைகளை செயல் படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ் நாடு அரசிதழின் அறிவிக்கையின் அந்த இடர்ப்பாடுகளை மூலமாக நீக்குவதற்குத் தேவையானதன்று அல்லது உகந்ததென்று தனக்குத் தோன்றக் கூடியவாறு, இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை**: ஆனால் அத்தகைய ஆணை எதுவும் , இந்த சட்டதின் தொடக்க காலத்திலிருந்து இரண்டாண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் செயற்படுத்தலாகாது

**<u>பிரிவு 11 பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் ஆகாது எனல்</u>**

இச்சட்டத்தின் வறைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்குமே கூடுதலாக இருக்க வேண்டுமேயன்றி அதனைக் குறை படுத்துதல் கிடையாது.

**<u>பிரிவு 12 புறம்போக்கு நிலங்களை அயலடைவு செய்தல்</u>**

சேமிப்புக் கொள்ளவு, நீரின் தன்மை இவற்றூடான குறுக்கீடு ஏதுமின்றி, பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள புறம் போக்கு நிலத்தின் பகுதி எதனையும் அரசு பொது நலனில் அயலடைவு செய்யலாம்

**<u>பிரிவு 12 விதிகளை செய்வதற்கான அதிகாரம்</u>**

1. அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதோவொன்றையுமோ நிறைவேற்றுவதற்க்கான விதிமுறைகள் செய்யலாம்
2. இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டாலன்றி, அவை வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.
3. இச்சட்டத்தின் படி செய்யப்பட்ட விதி அல்லது ஆனை அல்லது பிறப்பிக்கபட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டப்பேரவையின் முன்னர் வக்கப்பட வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட அல்லது அந்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றம் பேரவையானது அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றம் பேரவையானது அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கை செயல்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கக்கூடாது என்று சட்டப்பேரவை முடிவு செய்யுமானால் அதற்குப்பின் அந்த விதி, ஆணை அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றப்பட்ட வடிவில் தான் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ற அது செல்திறன் அற்றதாதல் இருக்க வேண்டும்.

**நன்றி : அடிப்படை சட்ட விழிப்புணர்வு துளிகள்....( ADVOCATE GNANASEKAR)**

# மாபியாக்களிடம் சிக்கி சிதையும் மருத்துவக் கல்வி!

***-சாவித்திரி கண்ணன்***

February 26, 2022

இந்தியாவில் எந்தப் படிப்புக்கும் இல்லாத வகையில் மருத்துவ கல்விக்கு பெரிய மவுசையும், மாயத் தோற்றத்தையும் கட்டமைத்து எம்.பி.பி.எஸ் படிப்பதை சமூக அந்தஸ்தாக்கிவிட்டார்கள்! ஆனால், அரசு மருத்துவர்களுக்கு நியாயமான சம்பளம் கூட இல்லை! இன்னொருபுறம் புற்றீசல் போல தரமற்ற தனியார் மருத்துவ கல்லூரிகள் பெருகுது..!

"இப்ப தமிழ் நாட்டில இன்ஜினியரிங் கல்லூரிகள் பெருகியதால் பல கல்லூரிகளில் படிக்க ஆள்வராமல் பல இடங்கள் காலியாக இருக்கிறது.! இன்ஜினியரிங் படித்தவர்களில் 80 சதமானோருக்கு சரியான வேலை கிடைக்கிறதில்லை. வருங்காலத்தில் மருத்துவக் கல்லூரிகளுக்கும் அந்த நிலைமை வரக் கூடும். டாக்டர்களுக்கு நோயாளிகள் காத்திருந்த நிலைமை மாறி, நோயாளிகளுக்கு டாக்டர்கள் காத்திருக்கும் நிலைமை விரைவில் ஏற்பட்டே தீரும்!" - என்கிறார்கள் நமது மருத்துவ நண்பர்கள்!

நல்ல திறமையாளரான மருத்துவர் கிடைப்பதற்கு நீட் தேர்வு மாதிரியான கஷ்டங்கள், கடினம் தேவை தானே என்றால், பாவம் நீங்கள் ஒரு அப்பாவியாகத் தான் இருக்கமுடியும்! நீட் தேர்வு கொண்டு வந்தது நல்ல திறமையாளர்களை கண்டுபிடிக்கவல்ல, மருத்துவக் கல்விக்கு ஒரு மவுசைக் கூட்டி மக்களை மருத்துவ கல்விக்காக பேயாய் அலையவிடறதுக்கு தான்!

அதன் விளைவு தான் இன்னைக்கு தெருவுக்கு நான்கைந்து பேர் நான் நீட் தேர்வுக்கு படிக்கிறேன்னு புறப்பட்டு இருக்காங்க! மருத்துவ கல்வி குறித்து கட்டமைக்கப்படும் மாயைகளால் பெரிய பலனடைந்து கொண்டிருப்பது மருத்துவக் கல்லூரிகள் நடத்தும் தனியார்களே! தங்கள் இஷ்டத்திற்கு கல்வி கட்டணத்தை உயர்த்தி, இன்று உலகத்திலேயே அதிக கட்டணம் வசூலிப்பவர்களாக இந்திய மருத்துவ கல்வியை சாதாரணமானவர்களுக்கு எட்டாக் கனியாக்கிவிட்டார்கள்! இந்தியாவிலே கருப்பு பணத்தை வெள்ளையாக்க மருத்துவ கல்லூரிகளையும், மருத்துவமனைகளையும் உருவாக்கி தனி ராஜ்ஜியத்தையே உருவாக்கிகிட்டு இருக்காங்க மாபியாக்கள்!

இந்தியாவில் மருத்துவ கல்வி பெற வசூலிக்கப்படும் கட்டணம் சீனா, ரஷ்யா, உக்ரைன், ஜார்ஜியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைக் காட்டிலும் நான்கைந்து மடங்கு அதிகமாகும். கிட்டதட்ட இதே பாட திட்டம், ஆய்வுக் கூடங்கள், தேர்வுகள் தான்! இந்தியாவில் ஒருவர் தனியார் மருத்துவ கல்லூரியில் ஐந்தாண்டுகள் படித்து வெளியேற ஒன்று முதல் ஒன்றேகால் கோடி ரூபாய் செலவாகிறது! ஆனால் மேற்கூறிய நாடுகளிலோ 15 முதல் 25 லட்சம் தான் செலவாகிறது! ஆகவே, நடுத்தர குடும்பத்து பிள்ளைகள் வேறு வழியின்றி வெளி நாடுகளுக்கு செல்கின்றனர். அந்த வகையில், இந்தியாவில் இருந்து ஆண்டுக்கு சுமார் 10,000 த்திற்கும் அதிகமான மாணவர்கள் வெளி நாடுகளுக்கு சென்று மருத்து கல்வி பயில்கின்றனர். அதுவும் நீட் தேர்வு வந்த பிறகு இந்த எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. காரணம், வெளிநாடுகளில் மருத்துவ கல்வி பயில பள்ளி இறுதி தேர்வில் ஐம்பது மதிப்பெண் பெற்று இருந்தாலே போதுமானது! இந்தியாவில் பணம் இருந்தால் அது கூட தேவையில்லை பள்ளி இறுதி வகுப்பில் ஜஸ்ட் பாஸ் இருந்தாலே போதும். அதுவும் நீட் தேர்வில் 15% மார்க் எடுத்தாலே தனியார் மருத்துவக் கல்லூரிகள் உங்களுக்கு சல்யூட் அடித்து எம்.பி.பி.எஸ் சீட்டு தந்துவிடுவார்கள்! என்ன ஒன்னு, நீங்க வருஷத்திற்கு 25 முதல் 27 லட்சம் கல்வி கட்டணம் கட்ட முடிந்தவராக இருக்கணும். இது தான் நீட் தேர்வு செய்த மகிமை! நீட் வருவதற்கு முன்பு 13 முதல் 15 லட்சமாக இருந்த ஆண்டு கட்டணத்தை கிட்டத்தட்ட இரண்டு மடங்காக உயர்த்திக் கொள்ள அனுமதித்துவிட்டது அரசு.

நீட் வந்த பிறகு மருத்துவ கல்விக்கு இன்னும் மவுசு கூடிவிட்டது! நீட் தேர்வை எழுதுவதே இங்கு ஒரு சமூக அந்தஸ்தாகிவிட்டது. எழுதறவர்களில் 80 சதவிகித மாணவர்கள் மருத்துவ கல்விக்கு வருவதில்லை. ஒன்னு பணம் இருக்காது அல்லது கவர்மெண்ட் கோட்டாவிலே சேரும் அளவுக்கான மதிப்பெண் இருக்காது. சரி எதுக்குடா இப்படி முட்டி மோதி இங்க எம்.பி.பி.எஸ் படிக்கிறார்கம் என்று , தெரியவில்லை! உலகத்தில் வேற எந்த ஒரு நாட்டிலும் மருத்துவ கல்விக்கு இப்படி ஒரு மவுசு இல்லை. அதனால் வெளிநாடு போய் நியாயமான கட்டணத்தில் படித்துவிட்டு வருவதற்கு ரொம்ப பேரு புறப்பட்ட உடனே, இங்க தனியார் கல்லூரி நடத்தறவங்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

அதனால அரசாங்கத்தையும், இந்திய மருத்துவ கவுன்சிலையும் பிடித்து லாபி செய்தாங்க. அப்ப வெளி நாட்டுல படிச்சுட்டு வருகிறவர்களுக்கு நாங்க இங்க ஒரு டெஸ்ட் வைப்போம். அதில் வெற்றி பெற்றால் தான் உன்னை மருத்துவராக அங்கீகரிக்க முடியும்னாங்க! FMGC என்ற அந்த தேர்வை மிகக் கடினமாக்கி எழுதுடா மவனே பார்க்கலாம், வெளி நாட்டுக்கு போய் காசை கொடுத்தியோ, இப்போது கஷ்டப்படு என்றார்கள்! அந்த தேர்வு எழுதுறவங்களில் பத்து, பனிரெண்டு சதவிகிதமானவர்கள் தான் தேறினாங்க. அடுத்தடுத்த முறை முயன்றாலும் கூட 23 சதமானவங்க தான் தேர்ச்சி பெற முடிந்தது. ஆகா, 23 சதவிகிதமானவர்கள் தேர்ச்சி பெறுகிறானா விடக் கூடாது!

அப்படி தேர்ச்சி பெற்றாலும் இங்கே தாய் மண்ணில் ஓராண்டாக அரசு மருத்துவமனைகளில் சேவை செய்து பயிற்சி எடுக்க மேலும் ஐந்து லட்சம் கட்டணம் என்றார்கள்! அதாவது ஒருவர் தன் சொந்த காசை செலவழித்து வெளிநாட்டில் மருத்துவ கல்வி பெற்றதற்காக தாய் மண்ணில் சம்பளமில்லாமல் ஓராண்டு சேவை செய்வதற்கான வாய்ப்புக்கு ஐந்த லட்சம் தண்டம் அழ வேண்டும்! அதையும் கட்டத் தயாராகிவிடுகிறானே பாவி இவனை எப்படி தடுப்பது என அதற்கு பெர்மிஷன் தருவதற்கே உங்களுக்கு பத்து, பன்னெண்டு மாதம் தண்ணி காட்டுவாங்க! இப்ப இந்த திமுக அரசு வந்த பிறகு அடடா, இது நியாயமில்லாத கட்டணமாக இருக்குதேன்னு அந்த கட்டணத்தை 29,400 ரூபாயாக நிர்ணயித்து சரிபண்ணிட்டாங்க!

ஆனா, இன்னும் புதுசா ஒரு கண்டிஷன் போட்டு இருக்கு தமிழ்நாடு மருத்துவ கவுன்சில்! இந்த கொரானா காலத்துல சில கல்லூரிகள் வெளி நாட்டில் ஆன்லைன் வகுப்பு எடுத்தாங்களாம். அதனால், நீ நேரடியாக கல்லூரிக்கு சென்றதாக 75 சதவிகித அட்டன்டன்ஸ் இருக்கணும்னு ஒரு போடு போட்டாங்க. இந்த கண்டிஷன் இந்தியாவிலே இங்கேயுள்ள ஆன்லைனில் தனியார் மருத்துவ கல்லூரிகளில் படித்தவங்களுக்கு தேவையில்லையாம்!

இந்தியாவிலே கருப்பு பணப் புழக்கம் அதிகமாக உள்ள துறையாக மருத்துவதுறை ஆகிவிட்டது. மருத்துவத் துறையை மாபியா கூட்டம் கையில வச்சுக்கிட்டு அரசுக்கு கட்டளை போட்டு தங்கள் விரும்புகிறபடி ஆட்டுவிக்குது ஒருபுறமென்றால், மறுபுறம் தமிழக அரசு கல்லூரியில் படித்து அரசு மருத்துவமனைகளில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் மருத்துவர்கள் நிலைமையோ பரிதாபமாக உள்ளது! இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களைவிட மிகக் குறைந்த ஊதியம் வாங்குவது தமிழக மருத்துவர்கள் தானாம்! எங்களுக்கு நியாயமான சம்பளத்திற்காக பனிரெண்டு ஆண்டுகளாக போராடி வருகிறோம்!

கொரானா காலத்தில் ஆபத்தை பொருட்படுத்தாமல் பணியாற்றி உயிர் துறந்த மருத்துவர்கள் குடும்பத்திற்கு கூட நிவாரணம் இல்லை. மக்கள் கூட்டம் நிறைந்து வழியும் அரசு மருத்துவமனையில் நேரம் காலம் பார்க்காமல் பணியாற்றுவதே ஒரு சவால். ஆனால், அந்த தொண்டுக்கு உரிய மரியாதையே இல்லை. அரசு மருத்துவர்களாகிய நாங்கள் எங்க குழந்தைகளை மறந்தும் டாக்டர்களுக்கு படிக்க வைக்க மாட்டோம். அந்த அளவுக்கு நோகடிக்கிறாங்க! அதானல நாங்க **மார்ச் உண்ணாவிரத போராட்டம்** அறிவித்து

உள்ளோம் என்கிறார் **அரசு மருத்துவர்களுக்கான சட்ட போராட்டக் குழு தலைவர் பெருமாள்**!

ஒருபுறம் மருத்துவத்தை உண்மையிலேயே சேவையாக கருதி கடும் உழைப்பை தருகிற அரசு மருத்துவர்கள் நியாயமான சம்பளத்துக்கு கூட ஆண்டுக்கணக்கில் போராடி சோர்வடைகிறார்கள்! ஆனால், மறுபுறம் மருத்துவம் கற்கவே மாபெரும் பிரயத்தனங்கள்! கோடிக்கணக்கில் செலவழிக்கிறார்கள். மருத்துவக் கல்வி மீது கட்டமைக்கப்பட்ட மாயைகள் தகர்ந்து நொறுங்கும் காலம் நெருங்குகிறது.

**சாவித்திரி கண்ணன்**

**அறம் இணைய இதழ்**

**<u>உக்ரைன் போர்</u> : ஏராளமான இந்திய மாணவர்கள் உக்ரைனுக்கு மருத்துவம் கற்கச்சென்று, போரினால் நமது நாட்டுக்குத் திரும்ப முடியாமல் தவிக்கிறார்கள். நமது நாட்டிலும் அதிக மருத்துவ கல்லூரிகள் உள்ளன. இருப்பினும் கோடிக்கணக்கான நுழைவுக்கட்டணம் தான் அவர்களை வெளி நாடு செல்ல வைக்கின்றன. அதிகமான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மருத்துவம் கற்க வைப்பதும் அவர்களின் பேரசையே. தனியார் மருத்துவமனையில் வேலை கிடைத்தால் நன்கு சம்பாதிக்கலாம் என்று தான்.**

**இதில் யாருக்குமே சேவை மனப்பான்மை சிறிதளவும் கிடையாது.**

---

**நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்**

**<u>எந்தப்பொருளும் வேண்டாம்</u>**

மூதறிஞர் இராஜாஜி மேற்கு வங்க மாநிலத்தில் கவர்னர் பதவி வகித்தார். (ஆண்டு 1947-1948). பதவிக் காலத்தில் ஏராளமான பரிசுப்பொருட்கள் கிடைத்தன. அவற்றையெல்லாம் ஓர் அறையில் சேகரித்து வைத்திருந்தார். அவரது பதவிக்காலம் முடிந்தவுடன், அப்போது மேற்கு வங்க முதல்வராக இருந்த பி. சி ராயிடம் (முழு பெயர் பிதன் சந்திர ராய்) விடை பெற்றார்

அப்போது தனது பதவிக்காலத்தில் தனக்கு கிடைத்த பரிசுப்பொருட்கள் அனைத்தையும் அரசாங்க கஜானவில் சேர்த்து விடுமாறு கேட்டுக்கொண்டார். அதைக் கேட்டு நெகிழ்ந்து போன பி. சி. ராய், “ஸார்! அது இருக்கட்டும்; அந்தப் பரிசுப் பொருட்களில் ஏதாவது ஒன்றையாவது இந்த வங்க மக்களின் நினைவாகத் தாங்கள் கொண்டு செல்ல வேண்டும்!” என்று கேட்டுக்கொண்டார்.

“வங்க மக்களின் அன்பு என் உள்ளத்தில் நிறைய இருக்கிறது: பொருளை வைத்து அவர்களை நினைவு படுத்த வேண்டியதில்லை. எனவே எந்தப் பொருளும் எனக்கு வேண்டாம்!” என்று கூறி மூதறிஞர் இராஜாஜி மறுத்துவிட்டார். பி. சி. ராய் விடவில்லை. கடைசியாக வெள்ளீப்பூண் போட்ட ஒரு கைத்தடியை எடுத்தார்,

“இந்தக் கைத்தடியை மட்டுமாவது பெற்றுக்கொள்ளுங்கள் “ என்றார் பி. சி. ராய்.

அதற்கு இராஜாஜி, “முதல்வர் அவர்களே! இந்த வயதான காலத்தில் இந்தக் கைத்தடி எனக்குப்பயன்படும் என்று நினைக்கிறீர்கள் இந்தக் கைத்தடியை ஊன்றியபடி சென்னையில் உள்ள மெரினா கடற்கரையில் வாக்கிங் செல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்

அப்போது நான் பதவியில் இருக்க மாட்டேன். எனக்குப் பாதுகாப்பு என்று எதுவுமே இருக்காது. இந்தத் தடியிலிருக்கும் வெள்ளிப்பூணுக்கு யாராவது ஆசைப்பட்டு, என்னைத் தாக்கிவிட்டு இதை எடுத்துகொண்டு ஓடிவிட்டான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதைக் கேள்விப்பட்டால் நீங்கள் மிகவும் வேதனைப்பட அடைய மாட்டீர்களா?. ஆகவே வேண்டாம்”, என்றார்.

மலைத்துப் போன முதல்வர் பி. சி. ராய், மனதில் ஏராளமான மரியாதையுடன் இராஜாஜிக்கு விடை கொடுத்தார்

## மரணப் போராட்டத்தில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்!

***-ச.அருணாசலம்***

February 16, 2022

கடும் நிதி நெருக்கடிகள்! பேராசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளம் தர முடியாத நிலைமையில் மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் மூச்சுத் திணறுகிறது! அதன் எதிர்காலம் கேள்விக்குள்ளாகி உள்ளது! காரணம் என்ன? யார் பொறுப்பு? தென்தமிழகத்தின் கல்வித்தேடலுக்கு ஒரு கலங்கரை விளக்காக ஒளி வீசிப் புகழ் பெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் இன்று தடுமாறிக்கொண்டுள்ளது வேதனை.

வரலாறு பல படைத்த அன்றைய மதராஸ் பல்கலைக்கழகத்திற்கு (சென்னை பல்கலைக்கழகம் Madras University) நிகராக மதுரையில் தென்தமிழகத்தின் கல்வித்தேவையை முன்னிட்டு 1965ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட மதுரை பல்கலை கழகம் பின்னாட்களில் மதுரை காமராஜர் பல்கலை கழகமாக வளர்ந்தது மட்டுமின்றி தெ பொ மீ. தொடங்கி மு.வ. வரை தலைசிறந்த கல்வியாளர்கள், தமிழறிஞர்களின் தலைமையில், கண்காணிப்பில் வளர்ந்து சிறந்தது. இந்தியா முழுமைக்கும் தேர்வு செய்யப்பட்ட 15 சீர்மிகு பல்கலைகழகங்களில் ஒன்றான மதுரை பல்கலைகழகம் இன்று நிதி நெருக்கடியினாலும், தவறான கொள்கை வழிகாட்டுதலாலும் தரமிழந்து தடுமாறிக்கொண்டுள்ள நிலைமையை நாம் காண்கிறோம்.

பொதுப் பல்கலைக்கழகமான மதுரை பல்கலைகழகம் தமிழக அரசால் நிதி ஒதுக்கப்பட்டு நிறுவப்பட்ட கலாசாலையாகும். தென் தமிழகத்தின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய உருவான பல்கலைகழகம் இன்று கற்றுத்தரும் பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் ஊதியத்தை சரிவர வழங்க இயலவில்லை. ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் தங்களது முதிர்ந்த வயதில் 5 மாதங்களுக்கு மேல் ஓய்வூதியத்திற்காக காத்துக்கிடக்கும் அவல நிலை உள்ளது. சென்ற மூன்று மாதங்களாக பேராசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதிய நிதியில் இருந்து சம்பளம் வழங்கி சமாளித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது..

கம்பீரமாக நிற்க வேண்டிய காமராஜர் பல்கலைகழகம் இன்று தவழ்ந்து கொண்டிருப்பதற்கு யார் காரணம்? எது காரணம்? இது வெறும் நிதி பற்றாக் குறையால் வந்த வினையா? , நிர்வாக கோளாறுகளால் வந்த குறையா?, 1990 முதல் தொடர்ந்து வந்த தமிழக அரசுகளின் கையாலாகாத்தனமும், கறைபடிந்த செயல்பாடுகளுமா?, ஊழல் மலிந்த தன் விளைவா? அல்லது கல்வித்துறையில் அதுவும் உயர்கல்வித்துறையை வணிகப் போட்டியாக மாற்றிய கல்விக் கொள்கையின் விளைவா? என்ற கேள்விகள் நம்மை துளைப்பதில் ஆச்சரியமில்லை.

சென்னை, மதுரை என்ற இரண்டே பல்கலைகழகங்கள் (சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ) என்ற நிலை மாறி இன்று கல்வி தாராளமயத்தின் வீச்சின் விளைவாக நிகர்நிலை பல்கலைகழகங்களும், தனியார் பல்கலைகழகங்களும் திசைக்கு ஒன்றாக பொது பல்கலைகழகங்களும் துறைக்கு ஏற்றார்போல் இணை பல்கலைகழகங்களும் பெருகி வளர்ந்துள்ளன.. நமது தேவையின் அடிப்படையில் இவை கற்றலுக்கு ஒருவகையில் உதவினாலும், கற்றலின் நோக்கம் அதற்கான நெறிமுறை ஆகிய உள்ளடக்கங்களும், தரவுகளும் கலாசாலைகளை விட்டு வெளியேற்றப்பட்ட நிலையை இன்று காணுகிறோம்

கல்விக்கான நிதி ஒதுக்கீடு, பல்கலைகழக மான்ய கழகத்தின் செயல்பாடு ஆகிய இவை இரண்டும்தான் நமது பல்கலைகழகங்களின் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டை பெருமளவு தீர்மானிக்கிறது என்பதில் மிகையில்லை. எடுத்துக்காட்டாக மதுரை பல்கலைகழகம் ஒரு குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் குறிப்பிட்ட நிதி ஆதாரங்கள் மூலமாக தன்னை வழிநடத்திக்கொள்ள வேண்டும். இது தவிர, ஆண்டு தோறும் அரசு

மான்யமும் வழங்குகிறது. ஆனால், அதற்கு சில நிபந்தனைகளும் செயல்விதிகளும் உள்ளன.

ஆனால், இன்றோ மதுரை பல்கலையின் ஆண்டு வருமானம் 60 கோடியாகவும் ஆண்டு செலவு 120 கோடியாகவும் உள்ளது! இதில் வருமானமாக கருதப்படுவது மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தேர்வு கட்டணங்கள், கற்றல் கட்டணங்கள் மற்றும் அரசின் நிதி ஒதுக்கீடு ஆகியவைதான்! செலவினங்களோ ஆசிரியர்களின் ஊதியம், நிர்வாக ஊழியர்களின் ஊதியம், நிர்வாக மேம்பாட்டிற்கான செலவு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான செலவு பராமரிப்பிற்கான செலவு மேலும் ஓய்வூதியமும் இதில் அடங்கும். கடந்த ஐந்தாண்டுகளை மட்டும் ஒப்பீட்டளவில் நோக்கினால், வருமானங்கள் குறைவதும், செலவினங்கள் அதிகரித்து வருவதும் கண்கூடு.

அரசு மான்யங்கள் வெட்டப்பட்டிருப்பதையும் நாம் பார்க்க முடிகிறது கிட்டத்தட்ட 580 கோடி ரூபாய்கள் தணிக்கை ஆட்சேபனைகளினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது! தணிக்கை ஆட்சேபனைக்கான காரணம் நிர்வாக சீர்கேடுகள், ஊழியர்களின் முறைகேடுகள் என சொல்லப்படுகிறது! முனைவர் படிப்பிற்கான மாணவர் சேர்க்கைகள், மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கல் ஆகியவற்றில் ஊழல் கொடிகட்டி பறக்கிறது.

இது குறித்து பல்கலை நிர்வாகமோ, மேலாண்மை செய்யும் சிண்டிகேட்டோ அதன் உறுப்பினர்களோ அல்லது அரசின் உயர்கல்வித் துறையோ அக்கறை காட்டவோ அல்லது இச் சிக்கலை தீர்க்க விதிமீறல்களின் விளைவாக ஏற்பட்ட தணிக்கை ஆட்சேபனைகளை தீர்த்துவைக்க முயற்சியோ இதுவரை நடக்கவில்லை. இத்தனைக்கும் அரசின் கல்வித்துறை, சட்டத்துறை ,ஊரக வளர்ச்சித்துறை போன்ற பல்வேறு செயலர்கள் (Secretaries to the Govt.,) சிண்டிகேட் சபையின் உறுப்பினர்கள் தான்!

ஒருபுறம் மான்ய வெட்டு மறுபுறம் தொலைதூரக்கல்வி மூலம் வரும் கீழிறங்கும் வருமானம் ஆகிய இரட்டை பிரச்சினைகள் மதுரை பல்கலைகழகத்தை பீடித்துள்ளது எனலாம். 2010களில் 53,000 த்திற்கும் அதிகமான மாணவர்கள் தொலைதூரக் கல்வியில் இணைந்திருந்தனர். இன்றோ, அதன் எண்ணிக்கை கழுதை தேயந்து கட்டெறும்பு ஆன கதையாக 2021-2022ல் வெறும் 5,000 மாக குறைந்துள்ளது. இவர்களால் பல்கலைகழகத்திற்கு வரும் வருமானமும் குறைந்துள்ளது.

ஆனால், ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை கூடியுள்ளது. எனவே இயற்கையாக அவர்களுக்கு அளிக்க வேண்டிய தொகையின் அளவும் கூடத்தான் செய்யும் .2004-2005 ல் வெறும் 471 ஆக இருந்த ஓய்வூதியர்களின் எண்ணிக்கை இன்று 2021 ஆகஸ்டில் 1,185 ஆக அதிகரித்துள்ளது. பல்கலைகழகத்தில் பலகாலம் பணிபுரிந்து மூப்பின் அடிப்படையில் ஓய்வு பெறும் பேராசிரியர்களே இங்கு ஓய்வூதியர்களாக உள்ளனர். இவர்களுக்கு சேரவேண்டிய பணத்தினை தாமதமின்றி வழங்குவதற்காக கார்ப்பஸ் நிதி 221 கோடி ஒதுக்கீட்டின் மூலம் 2012ல் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு பெனஷன் கார்ப்பஸ் பண்ட் என்று நாமகரணம் சூட்டப்பட்டது.

இத்துடன் அவர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட பணமும், வைப்புநிதியில் போடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியின் மூலம் பயனாளிகளுக்கு பணம் வழங்கப்பட்டது.

இன்று சிக்கல் ஏன் வந்தது? 471 பயனாளிகளுக்கு ஓய்வூதிய பலன்களை அளிக்க அன்று இந்த நிதி போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று கிட்டத்தட்ட மூன்று மடங்காக உயர்ந்து 1,185 ஆக கூடியுள்ள ஓய்வூதியர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய இந்த பணம் போதாது என்ற அடிப்படை ஞானம் இந்த அரசுகளுக்கு இல்லை.

விளைவு? பல்லாண்டு காலம் பேராசிரியராக பணியாற்றி ஓய்ந்த பின்னரும் நிம்மதியான வாழ்வுமுறை பேராசிரியர்களுக்கு மறுக்கப்படுகிறது. அவர்களை வீதிக்கு இழுக்கிறது! இன்றைய பல்கலைகழக நடைமுறை.ஓய்வூதிய பயனாளிகள் ஆண்டு தோறும் கூடினால், அதற்கான அரசு செலுத்த வேண்டிய நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்காமல்,

அதற்கான ஆதாரங்களை பல்கலைகழகமே தனது சுய வருமானத்திலிருந்தே திரட்ட வேண்டும் என்ற ஏழாவது ஊதியக்குழு 7th Pay Commission கூறியுள்ளதை அரசு அறிவுறுத்துகிறது. இத்தகைய மனிதாபிமானமற்ற அரசு கொள்கையை முறியடிக்காமல் இப்பிரச்சினை தீராது.

ஓய்வூதியர்களின் விவகாரத்தில் உலகெங்கிலும் உள்ள தாராளமயத்தை கடை பிடிக்கும் அரசுகளின் செயல்பாடு- அரசு தன் மூத்த குடிமக்கள் மேல் காட்ட வேண்டிய பரிவை மறந்து அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையில் இருந்து நழுவுதல், அவர்களது ரத்தத்தை சேமித்து வைக்கப்பட்ட பென்ஷன் நிதியை பங்குசந்தை சூதாட்டத்தில் முதலீடு செய்வது போன்ற பயங்கரவாத செயல்களினால் கோடிக்கணக்கான சாமானியர்களின் வாழ்க்கையை லாபத்திற்காக சூறையாடுகிறது. அதில் ஒரு அங்கம்தான் மதுரை காமராஜர் பல்கலைகழக பிரச்சினை!

அரசு சுட்டிக்காட்டியபடி நடந்தால், மாணவர்களின் கல்வி கட்டணமும் , தேர்வு கட்டணமும் அதிகரிக்கும் . கிராமப்புற மற்றும் எளிய மாணவர்களின் உதவித்தொகை வெட்டப்படும். ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் மேம்பாடு என்பதெல்லாம் பகல் கனவாய் மாறும்.

கல்விக்கான உரிமையே கேள்விக்குறியான போது உயர்கல்விக்கான உரிமை பற்றி பேச முடியமா? கல்வி வியாபாரத்தை உயர்த்திப்பிடிக்கும் அரசின் கீழ் இயங்கும் கலாசாலைகளும், பல்கலைகழகங்களும் தார்மீக உரிமையையும் பலத்தையும் இழந்து வணிக கூடாரங்களாக மாறும் காட்சியின் ஓரங்கமே மதுரை பல்கலைகழகத்தின் இன்றைய பரிதாப நிலை!

**இனி வரும் 3 ஆண்டுகளுக்கு திருச்சி மாவட்ட ஊழல் எதிர்ப்பு இயக்க பொறுப்பாளர்களாகத் தேர்வு செய்யப்பட்ட கீழ்க்கண்ட உறுப்பினர்கள் 23.02.2022 அன்று) பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.**

1. **திரு மோ.சுதாகர் ஏசுவடியான்** ( 94431 79625 ) : **தலைவர்**
2. **முனைவர் பெ.காளியண்ணன்** ( 94438 38857 ) : **துணைத் தலைவர்**
3. **பொறிஞர் த.ராஜன்** ( 88255 55905 ) : **செயலாளர்**
4. **திரு நா.தசரதராமன்** ( 94434 56798 ) : **துணைச் செயலாளர்**
5. **பொறிஞர் ந.ரெங்கராஜன்** ( 94863 46442 ) : **பொருளாளர்**

**பொறுப்பேற்றிருக்கும் அனைத்து பொறுப்பாளர்களுக்கும், ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு **N** சுப்ரமணியன்**,** தலைவர் **: 9444274352**
திரு **V** கார்த்திகை ராஜன்**,** பொதுச்செயலாளர் **: 87783 12823**
திருமதி பாக்யலட்சுமி**,** மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

₹1.85 கோடி கடன் தொகையை ₹14 லட்சத்தில் முடிப்பதா?

# வங்கி அதிகாரி மீது ஏன் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை கூடாது?

சென்னை, பிப்.20: விருதுநகர் மாவட்டம் மணப்புரத்தில் பாண்டியன் எக்ஸ்ட்ராக்‌ஷன் என்ற நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் கொல்கத்தாவில் உள்ள இன்டஸ்ட்ரீயல் இன்வெஸ்ட்மென்ட் வங்கியில் (ஐஐபிஐ) கடந்த 1992ல் ₹62 லட்சம் கடன் வாங்கியது. அதற்கு ஈடாக 2 சொத்துகளுக்கான ஆவணங்களை நிறுவனம் வங்கியிடம் கொடுத்துள்ளது.

**தானாக முன்வந்து விசாரித்த உயர் நீதிமன்றம் கேள்வி**



கடன் திரும்ப செலுத்தப்படாததால் வங்கி கடன் வசூல் தீர்ப்பாயத்தில் கடந்த 2000ம் ஆண்டு வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த தீர்ப்பாயம், வங்கிக்கு ₹1 கோடியே 85 லட்சத்தை தருமாறு நிறுவனத்திற்கு உத்தரவிட்டது. இந்நிலையில், இந்த கடனை ஒருமுறை செட்டில்மென்ட் என்ற வகையில் ₹14 லட்சம் தர சம்மதம் தெரிவித்து நிறுவனம் வங்கியிடம் அந்த தொகைக்கான செக்கை கொடுத்துள்ளது. இதையடுத்து, 2010ல் நிறுவனத்தின் கோரிக்கையை வங்கி ஏற்றது. இந்நிலையில், ஒன்றிய நிதி அமைச்சகத்தின் குழு அதை ஏற்கவில்லை.இதையடுத்து, ஒருமுறை செட்டில்மென்ட் தொகையை ஏற்குமாறும், சொத்து ஆவணங்களை திரும்ப தருமாறும் வங்கிக்கு உத்தரவிடக்கோரி நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம், 1992ல் ₹62 லட்சம் கடன் பெற்றும் 2010ல் ₹14 லட்சத்தை மட்டும் வாங்கிக்கொண்டு கடனை சரிசெய்வதை ஏற்க முடியாது. பொதுமக்களின் வரிப்பணத்தை அதிகாரிகள் பாதுகாக்க வேண்டும். தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காகத்தான் ஒன்றிய அரசு இதுபோன்ற வங்கிகளில் முதலீடு செய்கிறது. ஆனால், இதுபோன்று மிக குறைந்த தொகையை பெற்று கடனை முடித்துவிடுவது கண்டிக்கத்தக்கது. வங்கியின் இந்த நடவடிக்கையை நிதி அமைச்சகத்தின் குழு ஏற்கவில்லை.எனவே, கடன் வசூல் தீர்ப்பாயம் உத்தரவிட்ட தொகையை மனுதாரர் நிறுவனம் கட்ட வேண்டும். எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று கடந்த 2021 டிசம்பரில் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து நிறுவனம் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி, நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த வழக்கில் வங்கியின் செயல்பாடு அதிர்ச்சியளிக்கிறது. உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் கடனை வசூலிக்க வங்கி நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விஷயத்தை நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரிக்கிறது. நிறுவனத்தின் செட்டில்மென்ட்டிற்கு ஒப்புதல் அளித்த வங்கி அதிகாரி யார், அவர் மீதும் நிறுவனத்தின் மீதும் ஏன் லஞ்ச ஒழிப்பு விசாரணை நடத்தக்கூடாது, நிறுவனத்தின் 2 சொத்துகள் வங்கியிடம் இருக்கும்போது ஏன் கடன் தொகையை வசூலிக்க முடியவில்லை. இதில் உள்நோக்கம் உள்ளது. எனவே, இதுகுறித்து விசாரணை நடத்த விசாரணையை வரும் 23ம் தேதிக்கு தள்ளி வைக்கிறோம்.

# கோவை பெண் நீதிபதி ஊழல் புகாரில் 'சஸ்பெண்ட்'

**கோவை, பிப். 8–**

கோவையில் பணியாற்றிய பெண் நீதிபதி, ஊழல் புகாரில் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார்.

கோவையில், நிரந்தர மக்கள் நீதிமன்ற தலைவராக பணியாற்றி வந்தவர் உமா ராணி. 2016 – 2018 வரை, கோவை இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றினார்.

அப்போது, பல்வேறு வழக்கில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை திருத்தம் செய்து, லஞ்சம் பெற்று, ஒரு தரப்புக்கு சாதகமாக தீர்ப்பு அளித்ததாக, சென்னை உயர் நீதிமன்ற விஜிலென்ஸ் கமிட்டிக்கு புகார் சென்றது.



உமாராணி

விசாரணையில், நீதிபதி உமாராணி ஊழல் முறைகேடில் ஈடுபட்டது உறுதியானது. ஆனால், அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போடப்பட்டது.

இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் சுப்பிரமணியன் என்பவர் 'ரிட்' மனு தாக்கல் செய்தார்.

விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி, நீதிபதி உமா ராணி மீது நடவடிக்கை எடுக்கவும், புலன் விசாரணை அறிக்கையை விஜிலென்ஸ் கமிட்டி தாக்கல் செய்யவும் உத்தரவிட்டார்.

இதன் அடிப்படையில், நீதிபதி உமாராணி 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக புகார்

# பெண் காவல் ஆய்வாளர் வீட்டில் சோதனை ரூ.1 கோடி நகை, ஆவணங்கள் பறிமுதல்

• நாகர்கோவிலில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் நடவடிக்கை

நாகர்கோவில்

நாகர்கோவிலில் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் அவரது தோழியின் வீடுகளில், லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று நடத்திய சோதனையில் ரூ.8 லட்சம் ரொக்கம், நகைகள் உட்பட ரூ.1 கோடிக்கான சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருபவர் கண்மணி. இவர், ஏற்கெனவே குமரி எஸ்.பி. அலுவலகத்தில் தனிப்பிரிவு ஆய்வாளராக இருந்தார். இவரது கணவர் சேவியர் பாண்டியன், குமரி மாவட்ட நீதிமன்றத்தில் அரசு கூடுதல் வழக்கறிஞராக உள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக கண்மணி மீது, லஞ்ச ஒழிப்பு போலீஸாருக்கு புகார்கள் வந்தன. மேலும், நாகர்கோவிலில் அழகு நிலையம் நடத்தி வரும் கண்மணியின் தோழி அமுதா என்பவரும் சமீப காலமாக அதிக அளவில் பணத்தை புழக்கத்தில் விட்டதாக புகார் எழுந்தது.



▲ லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று சோதனை நடத்திய குமரி மாவட்டம் கீழராமன்புதூரில் உள்ள நாகர்கோவில் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் கண்மணியின் வீடு. (உள்படம்) ஆய்வாளர் கண்மணி.

இதையடுத்து, கன்னியாகுமரி லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. பீட்டர்பால் தலைமையிலான போலீஸார், நாகர்கோவில் கீழராமன்புதூரில் உள்ள கண்மணி வீட்டில் நேற்று காலை சோதனை நடத்தினர். அப்போது வீட்டிலிருந்த கண்மணி, சேவியர் பாண்டியனிடம் விசாரணை நடத்தினர்.

**பணம், ஆவணங்கள் பறிமுதல்**

அதே நேரத்தில், லஞ்சஒழிப்பு ஆய்வாளர் ரமா தலைமையிலான போலீஸார், நாகர்கோவில் மீனாட்சிபுரம் மீனாட்சி கார்டனில் உள்ள கண்மணியின் தோழி அமுதாவின் வீட்டிலும் சோதனை மேற்கொண்டனர். 2 இடங்களிலும் நடந்த சோதனையில் கணக்கில் வராத பணம் மற்றும் முக்கிய ஆவணங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இதுகுறித்து, லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. பீட்டர்பால் கூறும்போது, "கண்மணி வீட்டிலும், அமுதா வீட்டிலும் ஒரே நேரத்தில் சோதனை நடைபெற்றது. இச்சோதனையில் கண்மணி வீட்டில் இருந்து ரூ.7 லட்சத்து 90 ஆயிரம் ரொக்கம், ரூ.90 லட்சம் மதிப்புள்ள வைப்புத் தொகைக்கான வங்கி ஆவணங்கள் மற்றும் பிற ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அமுதா வீட்டில் இருந்து சொத்துப் பத்திரத்தின் பேரில் கடன் கொடுத்ததற்கான ஆவணங்கள், ரூ. 8 லட்சத்துக்கு மேல் நகை வாங்கியதற்கான ரசீது மற்றும் சொத்து ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன" என்றார்.

பெண் ஆய்வாளர் மற்றும் தோழி வீட்டில் நடைபெற்ற லஞ்ச ஒழிப்புச் சோதனை குமரி மாவட்ட போலீஸார் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

**கந்துவட்டிக்கு கடன்**

குமரி மாவட்ட காவல்துறையில் பணியாற்றும் அதிகாரிகள் பலர், ஆய்வாளர் கண்மணி மீது கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர் புகார்களைக் கூறி வந்தனர். ஆனால், அரசியல் மற்றும் துறைரீதியான தனது செல்வாக்கால் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்தது. பிற காவல் நிலையங்களில் வழக்குகளை கையாள்வதில் இவர் தலையிடுவதாகவும், இவற்றை மேலதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என்றும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதற்குமுன், நாகர்கோவில் எஸ்.பி. அலுவலக தனிப்பிரிவு ஆய்வாளராக இவர் பணிபுரிந்தபோது, இவருக்கு சாதகமாக இல்லாத காவலர்கள் பழி வாங்கப்பட்டதாகவும் காவல்துறையினர் வெளிப்படையாக பேசி வந்தனர்.

நாகர்கோவிலில் பியூட்டி பார்லர் நடத்தி வரும் தனது தோழி அமுதா மூலம், கந்துவட்டிக்கு பணம் கொடுக்கல் வாங்கல் செய்துவந்துள்ளார். இதில் அளவுக்கதிகமாக இவர் பணம் சம்பாதித்தது தெரியவந்தது. இவற்றை லஞ்ச ஒழிப்பு போலீஸார் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். நேற்று காலை கண்மணியின் வீட்டில் தொடங்கிய சோதனை இரவிலும் நீடித்தது.

பலரிடமும் கையெழுத்து மட்டும் பெறப்பட்ட வெற்றுபேப்பர்கள், அடமானத்துக்காக பெறப்பட்ட பலரது சொத்து பத்திரங்களை லஞ்ச ஒழிப்பு போலீஸார் கைப்பற்றினர்.

அத்துடன், ஏராளமான பரிசுப் பொருட்கள், 30 ஜோடிகளுக்கும் மேற்பட்ட பெண்களுக்கான நவீன செருப்புகளையும் பறிமுதல் செய்தனர். கணக்கில் வராத பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதை தொடர்ந்து, கண்மணி மற்றும் அவரது கணவரும் அரசு வழக்கறிஞருமான சேவியர் பாண்டியன் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்பு போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். கண்மணி மீது துறை ரீதியான நடவடிக்கையை காவல்துறை மேற்கொள்ளவுள்ளது.

குற்ற வழக்குகளில் சிறப்பாக புலன் விசாரணை செய்ததற்காக, மத்திய அரசின் சிறந்த காவல் அதிகாரிக்கான விருதை கடந்த ஆண்டு கண்மணி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

This PDF was originally uploaded to The Hindu Newspaper - ePaper (https://t.me/hindu_epaper_plm). Subscri

TAMILTH ALL 1 Calendar_Pg S.VENKATACHALAM 22_30_27

**நடிகன் , நடிகை** ஓய்வு
பெற்றதும்
**நாடாள நினைப்பதும்**
**ரவுடி** ஓய்வு பெற்றதும்
**அரசியல்வாதி**
ஆவதும்
**ராணுவ வீரர்** ஓய்வு
பெற்றதும் **வாட்ச்மேன்**
வேலைக்கு சேர்வதும்
நம் **தேசத்தில்** மட்டுமே
நடக்கும் **சோகம்** ....!!

முதியவர் ஒருவர் ஓட்டு போட்டுவிட்டு வெளியே வந்தார்.

பூத் ஏஜெண்டிடம் என் மனைவி ஓட்டு போட்டுட்டு போய்ட்டாளா என்று கேட்டார்.

ஏஜெண்ட் லிஸ்டை புரட்டி பார்த்துவிட்டு ஆமாம் ஓட்டு போட்டுட்டு போய்ட்டாங்க என்றார்.

முதியவர் வருத்தத்துடன் சொன்னார் - கொஞ்சம் முன்னாடியே வந்திருந்தா அவள பார்த்திருக்கலாம்.

பூத் ஏஜெண்ட் கேட்டார் - ஏன் அய்யா அம்மா உங்க கூட இல்லியா?

முதியவர் சொன்னார் - இல்லை தம்பி அவ செத்து 15 வருஷம் ஆச்சி - ஆனா ஓட்டு போட மட்டும் வந்துட்டு போறா.?!?!?!

இது ஒரு விழிப்புணர்வு பதிவு.



ஆண்டு-AM/ஆயுள்-LM உறுப்பினர் எண்/No:

லஞ்சம் தவிர். நெஞ்சம் நிமிர்

**ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை, (பதிவு எண் : 349/2001)**

**ANTI CORRUPTION MOVEMENT,CHENNAI, (REGN NO.349/2001)**

**155, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை- இந்தியா- 600023**

**Website: "anticorruptionchennai.com" மின்னஞ்சல் : acmchennai2001@yahoo.co.in**

**உறுப்பினர் சேர்க்கை படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **பெயர்**/Name | | AFFIX PHOTO/ புகைப்படம் ஒட்டவும் |
| 2. | **பிறந்த தேதி**/*Date of Birth* | | |
| 3. | **கூடுதலாக ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இணைக்கப்பட்டு ள்ளதா**? Whether one more passport size photo is annexed. | | |
| 4. | **கல்வி**/Education | | |
| 5. | **தொழில்**/Profession | | |
| 6. | **முகவரி** /Address (**பின்கோடுடன்**/with Pincode | | |
| 7. | **ஆதார் எண்**/Adhar No. | | |
| 8. | **தொலைபேசி எண்**/Ph.No. | | |
| 9. | **மின்னஞ்சல் முகவரி**/ Email id | | |
| 10. | **உறுப்பினர் கட்டண செலுத்திய விபரம்**/details of payment of Membership fees | **(DD-வரைவோலை//Cheque-காசோலை/NEFT-நெஃப்ட் ஏற்றுக்கொள்ளப்படும்/acceptable)** | |
| 11. | ஊழல் பற்றிய தங்கள் கருத்துக்கள்/your views on corruption | | |

**உறுதி மொழி/ OATH**

நான் என் வாழ்க்கையில்எச்சூழ்நிலையிலும் எந்த காரணம் கொண்டும் லஞ்சம் கொடுக்கவோ வங்கவோ மாட்டேன் என்றும், இந்த இயக்கத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடந்து கொள்வேன் என்றும், நமது நாட்டில் நிலவும் எல்லா வகை ஊழலையும் ஒழிக்க முழுமூச்சுடன் பாடுபடுவேன் என்றும். மற்றும் நான் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் எந்தவொரு பதவியிலும் இல்லை என்றும் உறுதி கூறுகிறேன்./ I hereby declare and swear that I will not pay/receive bribe in my life on any circumstances; I will abide by rules of this movement; I will work devotedly to eradicate all forms of corruption in this country and I am not holding any office in any form in any political party.

**தேதி**/Date

**இடம்**/Place

விண்ணப்பதாரர் கையொப்பம்/Applicant's signature

**அலுவல் பணிக்கு மட்டும்/For Office Use Only**

| | | | |
|---|---|---|---|
| உறுப்பினர் சந்தா Membership fees | ரூ. Rs. | பெற்ற ரசீது எண். Receipt No. | தேதி Date: |
| ஆண்டு//ஆயுள் உறுப்பினராக Enrolled as AM/LM Member in EC Resolution No. | அனுமதித்த செயற்குழு தீர்மாண எண். Dated | தேதி: | |
| | | | பொதுச்செயலாளர்/தலைமையக செயலர் கையொப்பம் General Secretary/HQ Secretary |

**ஆண்டு சந்தா**/Annual Subscription- Rs. 300/- , **அயுள் சந்தா**/Life Subscription Rs. 2500/-

குறிப்பு/Note: வங்கி கணக்கு விபரம்/Bank Account details: IOB,, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)

**சேமிப்பு கணக்கு எண்**/ Savings A/C No: 000901000041657 . **இரு பாஸ்போர்ட் அளவு போட்டோக்கள் மற்றும் அதார் கார்டு இனைக்கப்படவேண்டும்**. Enclose two passport size photos and Adhar card.

இலஞ்சம் தவிர்! **Date of Publication: 5th of Every Month** நெஞ்சம் நிமிர்!!

# நேர்மை நெறி- மார்ச் 2022


| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20





# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**


**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி**



Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 March 2022
Due to corona published online)


**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் இல்லா ஓரொக் கும்மே !**

***பெறுநர்***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,** AYANAVARAM, CHENNAI-23

**Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan**

இலஞ்சம் கொடுக்காதீர்! கொடுக்க விடாதீர்!! இலஞ்சம் வாங்காதீர்! வாங்க விடாதீர்!